**மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி :** தலைவர் அவர்களே, நம்முடைய திரு. சங்கராபுரம் முத்தையன் அவர்கள் ராமலிங்கனார் அவர்களைப் பற்றி மிகவும் தெரிந்தவர்கள். அவர்களே அந்த வகையில் பாட்டுக்களை எல்லாம் பாடி இருக்கிறார்கள். சிற்பங்கள் எப்படி இருக்க வேண்டும் என்று அவர்கள் ஒரு வரைபடம் கொடுத்தால் நிச்சயமாக அந்த வகையில் அந்தச் சிற்பங்களை அமைக்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**சுற்றுலா மையம் ஆக்குதல்.**

* *1787.* **திரு. கே. ஏ. செங்கோட்டையன் :**

மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பெரியார் மாவட்டம் சத்தி வட்டம் தலைமலை வனச் சரணாலயத்தை சுற்றுலா மையம் ஆக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

**மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) பெரியார் மாவட்டம், சத்தி வட்டம், தலைமலை வனச் சரணாலயம் என்று ஏதும் இல்லை. தலைமலை வனச் சரகத்தை சுற்றுலா மையம் ஆக்கும் திட்டமும் இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

**திரு. கே. ஏ. செங்கோட்டையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் குறிப்பிடும்போது சுற்றுலா மையமாக்கும் செயற்குறிப்புகள் இல்லை என்ற கருத்தைச் சொல்லி இருக்கிறார்கள். தந்தை பெரியார் அவர்களால் துவக்கப்பட்ட திராவிட இயக்கத்தில் வந்த நீங்கள் இன்றைக்கு ஆட்சியில் இருந்து கொண்டிருக்கிறீர்கள். இதைக் கருத்தில் கொண்டு பெரியார் மாவட்டத்தில் தலைமலைப் பகுதி இயற்கை வளம் நிறைந்த சிறந்த பகுதியாக இருப்பதால் முதுமலை, மைசூர் செல்கின்ற சுற்றுலா பயணிகள் அங்கே தங்கி அங்குள்ள பல்வேறு வன விலங்குகளைப் பார்க்கின்ற அளவுக்கு அதை சுற்றுலா மையமாக ஆக்கும் செயற்குறிப்பு குறித்து மீண்டும் பரிசீலிக்கப்படுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே தமிழ்நாடு முழுவதும் 41 இடங்களை மாவட்ட சுற்றுலாத் தலங்களாக அறிவித்திருக்கிறோம்.

*1990 ஏப்ரல் 19]*

அதிலே பெரியார் மாவட்டத்திலும் இரண்டு இடங்கள் அறிவிக்பட்டு இருக்கின்றன. அந்த இரண்டு இடங்கள்தான் என்பதில்லை. கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த திரு. நடேசன் அவர்கள் இருக்கிறார்கள். திற்பரப்பு, பேச்சிப்பாறையில் இருந்தாலும் கூட, தொட்டிபாலத்தையும் அறிவிக்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டு இருக்கிறார்கள். அதுபோல், இரண்டுக்கும் மேலாக, முக்கியமான இடம் என்று நாம் கருதினால் அந்த இடத்தையும் சுற்றுலாத் தலமாக அறிவிப்பது குறித்து பரிந்துரை செய்யலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. கே. ஏ. செங்கோட்டையன் :** பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு இடங்கள் பெரியார் மாவட்டத்தில் சுற்றுலாத் தலமாக அறிவிக்கப்பட்டிருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அவை எந்தெந்த இடங்கள் ? அதோடு சேர்த்து 3-வது இடமாக தலைமலைப் பகுதியையும் சுற்றுலா மையமாக்கும் செயற்குறிப்பை மீண்டும் அரசு பரிசீலிக்குமா என்று நான் மீண்டும் கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, பெரியார் மாவட்டத்தில் பவானி கூடுதுறை என்ற இடத்தை மாவட்ட சுற்றுலாத் தலமாக அறிவித்திருக்கிறோம். இரண்டாவது இடம் பற்றிய குறிப்பு இப்போது என்னிடம் இல்லை. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதையும் சேர்த்து நாம் ஆய்வு செய்யலாம்.

## சுற்றுலா மையமாக்குதல்

**8053.* **திரு. எஸ். ஏ. தங்கராஜன் :**

மாண்புமிகு இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

*(அ)* திண்டுக்கல்—காயிதே மில்லத் மாவட்டம், சிறுமலை, மலைக்கோட்டை, காமராஜ் நீர்த்தேக்கம், பேரணை போன்ற இடங்களை சுற்றுலா மையமாக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

*(ஆ)* ஆம் எனில், விவரம் என்ன ?

**மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*(அ)* இல்லை.

*(ஆ)* இக்கேள்விக்கு இடமில்லை.